கழகத்தால் சென்னையில் அன்றாடம் மேற்கொள்ளப்படுகிறது. இப்பயணத் திட்டங்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளிடம் அதிக வரவேற்பைப் பெற்றுள்ளன. பல புதிய சுற்றுலாப் பயணத் திட்டங்களும் தேவைக்கேற்ப தொடங்கப்பட உள்ளன. இந்தியாவிலேயே முதல் முதலாக சுற்றுலா முகவர்கள் சிங்கப்பூர் மற்றும் மலேசியா ஆகிய நாடுகளில் இக்கழகத்தினால் அமர்த்தப்பட்டுள்ளனர்.

இணைப்பு VI.

(330-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத—52 வினா எண். 11941-க்கான விடையைக் காண்க.)

''அரசுத் தொழிற்சாலைப் பணியாளர்கள் உதவி பெறும் வருங்கால வைப்பு நிதித் திட்டம் என்ற பொது வருங்கால வைப்பு நிதித் திட்டம் ஒன்றினை அரசு 1—4—70 முதல் கொண்டு வந்தது. இத்திட்டம் அரசுக்குச் சொந்தமான தொழிற்சாலைப் பிரிவுகளில் பணியாற்றும் எல்லாத் தொழிலாளர்களுக்கும் பொருந்தும். இதனால் வருங்கால வைப்பு நிதி (பல்வகை) சட்டத்தினை இந் நிறுவனங்கள் நடைமுறைப்படுத்துவதிலிருந்து இறுதியான விதிவிலக்கு அளிக்கும் வகையில், தற்காலிக 'தளர்த்துதல் ஆணை' யொன்று 38 நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டது.

2. வருங்கால வைப்பு நிதி நிறுவனத்திலிருந்து மாநில அரசுக்கு மாற்றப்பட வேண்டிய மொத்தத் தொகையான சுமார் ரூ. 176 இலட்சங்களில் ரூ. 15 இலட்சங்கள் ஏற்கனவே மாற்றப்பட்டுவிட்டது. மீதித் தொகையான சுமார் 161 இலட்சங்களை மாற்றம் செய்யும் வழி வகைகளுக்கென, வருங்கால வைப்பு நிதி நிறுவனம் தமிழக அரசுக்கு செயற்குறிப்பொன்றினை அனுப்பியுள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

இணைப்பு VII.

(330-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத—53 வினா எண். 12038-க்கான விடையைக் காண்க.)

(அ) அறநிலையங்களுக்குச் சொந்தமான கட்டிடங்களுக்கு நியாய வாடகை, நிர்ணயம் செய்ய இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையரால் 1976 நவம்பரில் நியாய வாடகை நிர்ணயக் குழுக்கள் அமைக்கப்பட்டன. சம்பந்தப்பட்ட துணை ஆணையரைத் தலைவராகவும் அறநிலையத்துறையின் செயல் பொறியாளரை தொழில் நுட்ப உறுப்பினராகவும் ஆலயச் செயல் அலுவலரைச் செயலாளராகவும் கொண்டனவாக அவை இருந்தன. இக்குழுக்கள் பொதுப் பணித்துறை பின்பற்றும் வித